1978 மார்ச் 3]

நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு.

* 366. வினா—திரு. கே. சுப்பிரவேலு : மாண்புமிகு சட்டத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ் தட்டெழுத்தர்களின் தட்டுப்பாடு காரணமாக நீதி மன்றத் தீர்ப்புகள் தமிழில் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ள தென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு என்ன நட வடிக்கை எடுக்க உள்ளது ?

THE HON. THIRU K.NARAYANASWAMY MUDALIYAR :

(a) & (b) A paper is placed on the table of the House.

திரு. கே. சுப்பிரவேலு: அவைத் தலைவர் அவர்களே, நம்மு டைய சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்தத் தட்டெழுத்தர்கள் சில காலங்களில் கிடைக்காத காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டது என்பது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON.THIRU NARAYANASWAMYMUDALIYAR: Thec ause for not delivering judgements in Tamil by reason of the shortage of Typists and Steno-typists may be partly true and partly correct, but not wholly true and not wholly correct. For the High Court has given permission to the presiding officers who are not able to express themselves in good Tamil to write judgements in English upto November 1977. It is only later some of the Presiding officers also asked for further permission to write judgements in English and that period is extended up to 31st January 1978. The present position, is, it is presumed that hereafter the judgement will be written in Tamil. But anyway there is still the shortage of Typists and Steno-typists who are versed in Tamil language.

578–579ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற் றுள்ளது.

[1978 மார்ச் 3

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்; பேரவைத் தலைவர் அவர்களே. நாங்கள் தமிழில் கேட்கிறோம், பதில் ஆங்கிலத்தில் இருக்கிறது: நாங்கள் தமிழில் சொல்வதை அவர்களாலும் புரிந்து கொள்ள முடியவில்லை, அவர்கள் ஆங்கிலத்தில் சொல்வதை எங்களாலும் புரிந்து கொள்ள முடியவில்லை, இங்கேயே இப்படிப்பட்ட சிரமமான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்புகளை தமிழில் தருவதற்கு வசதியாக தட்டெழுததர்களை அதிகப்படுத்துவதற்கு என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? இங்கேயே இவ்வளவு சிரமங்கள் இருப்பதைப் பார்த்து இதில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. புது தட்டெழுத்து இயந்திரங்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதில் நாங்கள் பரிசீலனை செய்து கொண்டு இருப்பது மட்டுமல்ல, அதற்கான முயற்சியில் இறங்கியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: தற்பொழுது இருக்கிற தட்டெழுத்தில் அதிகமான எழுத்துக்கள் இருக்கின்றன. தந்தை பெரியார் அவர்கள் தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற முறையில் தட்டெழுத்துக்களில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று விரும்பினார். அந்த முறையில் தட்டெழுத்து இயந்திரங்கள் தயாரிக்கப்படுமானால் தட்டெழுத்து இயந்திரங்கள் தயாரிக்கப்படுவதற்கும், இதில் பயிற்சி பெறுபவர்களுக்கும் எளிதாகவும், வசதியாகவும் இருக்கும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அதைப்பற்றி அரசு அக்கறையோடு பரிசீலனையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே,

* * * * * *

(முற்பகல் 9-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மார்க்கபந்து அவர்கள் எழுப்பிய கேள்விமேல் பேசிய அத்தனையையும் நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.